# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை : திரு. செ. தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 72 /2017**

திரு. J. சிவகாமி,
க/பெ D.V. ஜெயபாலன்,
51/9, பேரடைஸ் பிளாட்,
6வது பிளாக், வளையாபதி ரோடு,
முகப்பேர் கிழக்கு, சென்னை–37. . . . . மேல்முறையீட்டாளர்
(திருமதி. J. சிவகாமி &
திரு. கோதண்டராமன், வழக்கறிஞர்)

எதிர்

செயற் பொறியாளர்/திருநெல்வேலி/விநியோகம்/கிராமப்புறம்,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சிவந்திப்பட்டி ரோடு, தியாகராய நகர்,
திருநெல்வேலி–627 811. . . . எதிர்மனுதாரர்கள்
(திரு. S. ஜெயசீலன், உதவி செயற்பொறியாளர்/தாழையூத்து &
திரு. A. கிருஷ்ணன், உதவி பொறியாளர்/கங்கைகொண்டான்)

**கேட்புரை நாள் : 14–03–2018**
**ஆணை நாள் : 11.06.2018**

திருமதி. J. சிவகாமி, க/பெ ஜெயபாலன், வளையாபதி ரோடு, முகப்பேர் கிழக்கு, சென்னை அவர்களின் 19.12.2017 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண். 72 / 2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 14.03.22018 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

# ஆணை

## 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :

மேல்முறையீட்டாளர் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தாலுகா, பருத்திகுளம் மின் பகிர்வு சன்னதுபுதுக்குடி கிராமத்தில் தனது பட்டா நிலத்தில் (சர்வே எண்.42/1, 42/2A) திருமதி. குருவம்மாள் என்பவர் தனது நிலம் என்று மின் வாரியத்திடம் போலி ஆவணங்கள் கொடுத்து மின் கம்பங்கள் நட்டு மின்இணைப்பு பெற்று உள்ளதாகவும் மின் கம்பங்களை உடனடியாக அகற்றக் கோரியும் முறையிட்டுள்ளார்.

## 2. வழக்கின் சுருக்கம்:

2.1 மேல்முறையீட்டாளர் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தாலுகா, பருத்திகுளம் மின் பகிர்வு சன்னதுபுதுக்குடி கிராமத்தில் உள்ள தனது பட்டா நிலத்தில் (சர்வே எண்.42/1, 42/2A) திருமதி. குருவம்மாள் என்பவர் தனது நிலம் என்று மின் வாரியத்திடம் போலி ஆவணங்கள் கொடுத்து மின் கம்பங்கள் நட்டு மின்இணைப்பு பெற்று உள்ளதாகவும் மின் கம்பங்களை உடனடியாக அகற்றக் கோரி புகார் மனுக்களை ADGP/VIGILENCE மற்றும் செயற்பொறியாளர் அவர்களிடமும் புகார் மனு பதிவு செய்திருந்தார்.

2.2 ஆனால் இது சம்மந்தமாக எவ்வித நடவடிக்கையும் எதிர்மனுதாரர்களால் எடுக்கப்படவில்லையென 7.11.2017 நாளிட்ட தனது முறையீட்டை திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் மனு அளித்துள்ளார். மன்றம் தனது ஆணையை 29.11.2017 அன்று அளித்துள்ளது. மன்றத்தின் தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் தனது மேல்முறையீட்டினை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார். அம்மனு மேல்முறையீட்டு மனு 72/2017 ஆக பதிவுசெய்யப்பட்டுள்ளது.

## 3. மன்றத்தின் தீர்வு

3.1 திருநெல்வேலி மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 29.11.2017 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்வு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு*

*மன்றம் மனுதாரர் மற்றும் செயற்பொறியாளர்/விநியோகம்/கிராமபுறம்/திருநெல்வேலி இவ்இருவர் தெரிவித்த கருத்துக்களை ஒப்பிட்டு மன்றம் மனுதாரர் கோரிக்கையான மின்பாதையை மாற்றி அமைப்பதற்கு நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ள காரணத்தினால் எவ்வித உத்தரவும் வழங்க இயலாது என மன்றம் மனுதாரரிடம் தெளிவாக எடுத்துரைத்தது. மேலும், மன்றம் மனுதாரரிடம் தங்கள் கோரிக்கை தொடர்பாக உரிய நீதிமன்றத்தின் மூலம் தனது உரிமையை உறுதிபடுத்தும்படி மன்றம் மனுதாரரிடம் தெளிவாக எடுத்துரைத்தது."*

**4. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:**

**4.1** செயற்பொறியாளரிடம் **06.09.2016** அன்று புகார் மனு பதிவு செய்தும், **28.08.2016** கயத்தூர் காவல் நிலையத்தில் குருவம்மாள் மற்றும் முப்பிடாதி அருள்ராஜ் மீது FIR பதிவு செய்யப்பட்டது. **12.11.2016** குருவம்மாள், மின்இலாக மீதும் வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பி உள்ளேன். சென்னை **ADGP/VICELANCE** மனு அளித்து 27.02.2017 அன்று மதுரை விழிப்புணர்வு அதிகாரிகள் அசல் ஆவணங்கள் ஆய்வு செய்து (வட்டாச்சியர் மூலம் அளந்து எல்லைகள் உள்ளது) பட்டா நிலத்தில் உள்ள இரண்டு மின்கம்பங்களை அகற்றுமாறு அறிவுரை வழங்கியதை, ஏற்காமல் நீதி மன்றம் மூலம் தீர்வு காணும்படி கூறுகின்றார்கள்.

**4.2** மீண்டும் **21.10.2017** அன்று நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம் திருநெல்வேலியில் மனு அளித்தேன். **29.11.2017** அன்று நேரில் ஆஜராகி எனது தரப்பு வாதங்களை எடுத்து உரைத்து ஓர் ஆண்டாக எந்த நடவடிக்கையும் எடுக்காததையும், குருவம்மாள் அவர்களிடம் அதிகாரிகள் சமரசம் செய்வதாக கூறி, மின் கம்பங்களை அகற்ற ஓர் ஆண்டாக காலம் கடத்தினார்கள்.

**4.3** மேற்படி எனது நிலத்தின் சர்வே எண்.**42/1** – **1996** அன்று குருவம்மாள் என்பவரிடமும் எண்.**42/2A**, நிலம் முப்பிடாதி என்பவரிடமும் கிரையம் பெற்று மேற்படி இருவரும் **29.11.1996** அன்று கயத்தூர் பத்திரபதிவு அலுவலகத்தில் கிரையம் செய்து கொடுத்தார்கள்.

**4.4** மீண்டும் கோவில்பட்டி சார்பு நீதி மன்றத்தின் வழக்கில் **28.01.2010** அன்று தீர்ப்பு அளிக்கப்பட்டு வட்டாட்சியர் அலுவலகம் எல்லைகளை ஆய்வு செய்து பட்டா எண்.**84, 1209** –

5.02.2013 வழங்கி உள்ளார்கள். இதில் எவ்வித நில தகறாறும் இல்லை. மேற்படி பட்டா நிலம் 20 ஆண்டுகளாக எனது அனுபவத்தில் உள்ளது. உரிய வேலியும் எல்லைகல்லும் உள்ளது. வட்டாட்சியர் அலுவலக சர்வேயர் மூலம் அளந்து உறுதி செய்யப்பட்டுள்ளது.

4.5 முப்பிடாதி (கு/பெ) Late சுடலை முத்து என்பவரின் சர்வே எண்.42–ல் மின் கம்பங்களும், எனது பட்டா நிலத்திற்குள் 2 மின்கம்பங்கள் நட்டு குருவம்மாளுக்கு 22.08.2016 மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

4.6 மேற்படி குருவம்மாள் நிலத்திற்கு மாற்று வழியில் மின் இணைப்பு உள்ளது. மின் வாரியம் அதை எடுத்துக் கொள்ளாமல் நான் ஊரில் இல்லாத போது இரவு 7 மணிக்கு அவசரமாக டோசர் இயந்திரம் வைத்து உள்ள தனியார் நபர் மூலம் எனது நிலத்தின் வழியாக 2 மின்கம்பங்கள் நட்டு மின் இணைப்பு கொடுத்து உள்ளார்கள்.

4.7 29.11.2017 அன்று குறைதீர்க்கும் மன்றத்தில் ஆஜராகி மேற்படி விவரங்களை தெரிவித்தேன். அதுவரை குருவம்மாள் 05.11.2017 அன்று கோவில்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மின் வாரியத்தின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதால் மின் வாரியம் வழக்கு முடியும் வரை மின் கம்பத்தை இடம் மாற்றியமைக்க இயலாது என்று கூறுகின்றார்கள்.

4.8 எங்களது கோரிக்கை எனது பட்டா நிலத்தில் உள்ள 2 மின் கம்பங்களை அகற்ற வேண்டும் என்பது தற்போது நீதிமன்ற வழக்கில் வரவில்லை.

4.9 குருவம்மாள் நீதிமன்ற வழக்கு மின் இணைப்பு மின் வாரியம் துண்டிக்கக் கூடாது என்பது எனது வழக்கு சம்மந்தப்பட்டது அல்ல. மற்றும் மின்கம்பங்கள் மாற்றி அமைப்பதற்கு செலவாகும் மதிப்பிட்டு தொகையை பாதிக்கப்பட்ட எங்களிடம் கேட்பதும், புதிய வழிதடத்தை காண்பதும் மின் வாரியமே ஏற்க வேண்டும்.

4.10 நில அளவு சம்பந்தமாக உரிய முறையில் வட்டாட்சியர் அலுவலக சர்வேயர் மூலம் அளந்து உறுதி செய்து குருவம்மாள் கணவர் சுப்பிரமணியம் ஆகியோரிடம் சாட்சி கையொப்பம் பெற்று உள்ளோம்.

4.11 கோவில்பட்டி நீதிமன்ற வழக்கு குருவம்மாள் மின் வாரியத்திற்கும் மின் இணைப்பை துண்டிக்க கூடாது என்பதே. மனுதாரர் சிவகாமியின் கோரிக்கை மின் கம்பங்களை எனது நிலத்தில் இருந்து அகற்றுவது மேற்படி நீதிமன்றத்தில் உள்ள கோரிக்கைக்கும் சம்மந்தம் இல்லை என்பதால், குறைதீர்க்கும் மன்றம் வழங்கிய தீர்வை ஆய்வு செய்து எனது வாழ்வாதாரத்தை பெற்று தரும்படி மின்குறை தீர்ப்பாயத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் :</u>

5.1 திருமதி. குருவம்மாள் அவர்களுக்கு மின் இணைப்பு வழங்க மின் வாரியத்தால் நிறுவப்பட்டிருக்கும் மின்கம்பங்களை இடமாற்றம் செய்வது சம்மந்தமாக திருமதி. சிவகாமி அவர்கள் அளித்த புகார் மனுவிற்கு தகுந்த விளக்கம் கடந்த 06.09.2016 அன்றே திருமதி. சிவகாமி அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

5.2 இந்நிலையில் கடந்த 29.11.2017 அன்று திருநெல்வேலி மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற கூட்டத்தில் மின்கம்பங்கள் இடம் மாற்றம் செய்வது சம்மந்தமாக தமிழ்நாடு மின் வழங்கள் விதி TNERC/SC/7/24, dt. 18.03.2011ல் அத்தியாயம் 2(5)(6)ல் குறிப்பிட்டுள்ளதை தெளிவாக சுட்டிக்காட்டி எடுத்துரைக்கப்பட்டது. திருமதி. சிவகாமி அவர்கள் கூறுவது போல் இல்லாமல் திருமதி. குருவம்மாள் அவர்களிடம் உரிய விளக்கம் கோரி கடந்த 06.09.2016 அன்றே கடிதம் அனுப்பப்பட்டது. மேலும் கடந்த 10.08.2017 நாளிட்ட கடிதத்திலும் திருமதி. குருவம்மாள் அவர்கள் மின் இணைப்பு பெற மின்வாரியத்திற்கு வழங்கிய ஆவணங்கள் போலியானது என உறுதிசெய்யப்பட்டால் அவருக்கு வழங்கிய மின் இணைப்பை மின் துண்டிப்பு செய்ய மேல் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

5.3 திருமதி. சிவகாமி அவர்கள் கூறுவது போல் திருமதி.குருவம்மாள் மற்றும் திரு.முப்பிடாதி ஆகியோர்கள் திருமதி. சிவகாமி அவர்களுக்கு சர்வே எண்.42/1 மற்றும் 42/2A ஆகியவற்றிலுள்ள நிலத்தை கிரயம் செய்து கொடுத்தது, திருமதி.குருவம்மாள் அவர்களுக்கு மின்இணைப்பு வழங்கிய 23.08.2016 வரை மின்வாரியத்திற்கு தெரியாது.

5.4 திருமதி.குருவம்மாள் அவர்களுக்கு புதிய மின்இணைப்பு வழங்க புதிய மின்கம்பங்கள் நிறுவ களஆய்வுக்கு சென்றபோது அங்கு எந்தவிதமான பாகபிரிவினையோ, எல்லைக்கற்களோ இல்லாத நிலையில் தான் இருந்தது. மேலும் திருமதி. சிவகாமி அவர்கள் கூறுவது போல் பட்டா எண்.1122 ஆனது திருமதி. சிவகாமி அவர்களின் தனிப்பட்ட பெயரில்லை, கூட்டுப்பட்டாவாகத்தான் இருக்கிறது.

5.5 திருமதி.குருவம்மாள் அவர்கள் தனது வீட்டிற்கு புதிய மின் இணைப்பு வேண்டி கங்கை கொண்டான் பிரிவு அலுவலகத்தில் சமர்ப்பித்த விண்ணபத்தில், தனது வீட்டிற்கும் வரும் பாதை தனக்கும் தனது சகோதரர் திரு.முப்பிடாதி அவர்களுக்கும் சொந்தமானதென்றும் அதற்கு சாட்சியாக திரு. முப்பிபிடாதி மற்றும் திருமதி.குருவம்மாள் ஆகியோர்களுக்கு இடையே 1992ம் ஆண்டு நடைபெற்ற பாகபிரிவினை பத்திரத்தின் சான்றொப்பமிட்ட நகலையும், தனது வீட்டிற்கு செல்லும் பாதைக்குரிய வரைபடத்தை சன்னது புதுக்குடி ஊராட்சி மன்ற தலைவரிடமிருந்து பெற்றுத் தந்ததின் அடிப்படையிலும், புதிய மின்பாதை அமைக்க செலவாகும் தொகையையும் மின்வாரியத்திற்கு செலுத்தியதின் அடிப்படையிலும், கடந்த 18.06.2016 அன்று திருமதி.குருவம்மாள் அவர்களின் விண்ணபம் பதிவு செய்யப்பட்டு பின்னர் கடந்த 23.08.2016 அன்று புதிய மின் இணைப்பு வழங்கப்பட்டது. திருமதி. சிவகாமி அவர்கள் கூறுவது போல் ஒரே நாள் இரவில் திருமதி.குருவம்மாள் அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படவில்லை.

5.6 திருமதி.குருவம்மாள் அவர்கள் நீதிமன்றம் சென்று திருமதி. சிவகாமி அவர்களுக்கு கிரயப்பத்திரம் மூலம் நிலம் எதுவும் விற்பனை செய்யவில்லை என்றும் மேற்படி மின்வழித்தடம் அமைந்துள்ள சர்வே எண்.40, 42/1, 42/2A ஆகியவை தனக்கும், தனது சகோதரர் திரு. முப்பிடாதி மற்றும் தனது தந்தை திரு.சுடலைமுத்து கோனார் ஆகியோருக்கு சொந்தம் என்றும் ஆகவே அந்த நிலத்தின் வழியாக மின்கம்பம் நிறுவி தனது வீட்டிற்கு வழங்கப்பட்ட மின் இணைப்பு எண்.023–006–555ஐ மின் துண்டிப்பு செய்யக்கூடாது என்றும் கோவில்பட்டி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். அந்த வழக்கின் எண்.OS 216/2017 ஆகும். அந்த வழக்கு நிலுவையில் உள்ளது.

5.7 ஆகவே மேற்கண்ட வழக்கில், சர்வே எண்.40, 42/1, 42/2A லுள்ள நிலம் கிரயம் செய்தது ஒரு பொருளாக இருப்பதால், நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலேயே, திருமதி. சிவகாமி அவர்கள்

அளித்த மனு மீது நடவடிக்கை எடுக்க இயலும் என கடந்த **29.11.2017** அன்று திருநெல்வேலி நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற கூட்டத்தில் திருமதி. சிவகாமி அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது.

**5.8** மேலும் தமிழ்நாடு மின் வழங்கல் விதி TNERC/SC/7/24, dt. 18.03.2011 ல் அத்தியாயம் **2(5)(6)**ல் மின்கம்பம் மாற்றியமைப்பது பற்றி தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

*"6. <u>Service wire/line, structure & equipments shifting charges:</u>*

*The cost of shifting of service/line shall be borne by the consumer. The consumer shall pay the estimated cost of shifting in advance in full. The shifting work will be taken up only after the payment is made."*

**5.9** திருமதி. சிவகாமி அவர்கள், திருமதி.குருவம்மாள் அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கிய பிறகு, கடந்த **06–09–2016** அன்றுதான் திருமதி.குருவம்மாள் அவர்களுக்கு மின் இணைப்பு வழங்க மின் வாரியத்தால் நிறுவப்பட்டிருக்கும் மின்கம்பங்கள் தனக்கு சொந்தமான நிலத்தில் வருவதாக கங்கைகொண்டான் பிரிவு அலுவலகத்திற்கு புகார் மனு கொடுத்தார். அதனால் தான் திருமதி. சிவகாமி அவர்களுக்கு எவ்வித முன்னறிவிப்பும் மின்வாரியத்தால் கொடுக்க முடியவில்லை.

**5.10** சர்வேயர் மூலம் நிலஅளவை செய்தது சம்மந்தமாக எவ்வித அதிகார பூர்வ ஆவணமும் மின்வாரியத்திற்கு திருமதி. சிவகாமி அவர்கள் இதுவரை அளிக்கவில்லை.

**5.11** ஆகவே மின் வழித்தடம் அமைத்த இடம் சம்பந்தமான வழக்கு நிலுவையில் இருப்பதால் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலும், வாரிய விதிகளின் படி மின்கம்பத்தை இடமாற்றி வைக்க புதிய இடம் அடையாளம் காண்பித்து மின்கம்பத்தை இடமாற்றியமைக்க ஆகும் தொகையையும் வாரியத்திற்கு செலுத்தும் பட்சத்திலும் தான், திருமதி. சிவகாமி அவர்கள் வேண்டுவது போல மின்கம்பத்தை இடம்மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்க இயலும் என இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

## 6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>

**6.1** மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக **14.3.2018** அன்று மின்குறைதீர்ப்பாளரின் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளர் திருமதி. J. சிவகாமி & திரு. கோதண்டராமன், வழக்கறிஞர் ஆகியோர் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தனர்.

6.3 எதிர்மனுதாரர்கள் சார்பில் திரு. S. ஜெயசீலன், உதவி செயற்பொறியாளர்/தாழையூத்து & திரு. A. கிருஷ்ணன், உதவி பொறியாளர்/கங்கைகொண்டான் ஆகியோர் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தனர்.

## 7. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 மேல்முறையீட்டாளர் திருமதி. J. சிவகாமி & திரு. கோதண்டராமன், வழக்கறிஞர் ஆகியோர் கலந்து கொண்டு தங்களது மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினர்.

7.2 மேல்முறையீட்டாளர் தனது நிலத்தின் சர்வே எண்.42/1 ஆனது 1996 அன்று குருவம்மாள் என்பவரிடமும் சர்வே எண்.42/2A, நிலம் திரு.முப்பிடாதி என்பவரிடம் கிரையம் பெற்றதன் அடிப்படையில் மேற்படி இருவரும் 29.11.1996 அன்று கயத்தூர் பத்திரபதிவு அலுவலகத்தில் பத்திர பதிவு செய்து கொடுத்துள்ளதாக தெரிவித்தார்.

7.3 அதன்பிறகு கோவில்பட்டி சார்பு நீதி மன்றத்தின் வழக்கில் 28.01.2010 அன்று தீர்ப்பு அளிக்கப்பட்டு வட்டாட்சியர் அலுவலகம் மூலம் எல்லைகளை ஆய்வு செய்து பட்டா எண்.84, மற்றும் பட்டா எண்.1209 ஆகியவை 5.02.2013 அன்று வழங்கி உள்ளதாகவும், இதில் எவ்வித நில தகறாறும் இல்லாமல் 20 ஆண்டுகளாக அவரது அனுபவத்தில் உள்ளதாகவும், நிலத்திற்கு உரிய வேலியும் எல்லை கல்லும் அமைக்கபட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

7.4 குருவம்மாள் நிலத்திற்கு மாற்று வழியில் மின் இணைப்பு உள்ளதாகவும், மின் வாரியம் அதை கருத்தில் கொள்ளாமல் அவர் ஊரில் இல்லாத போது இரவு 7 மணிக்கு அவசரமாக டோசர் இயந்திரம் வைத்து அவரது நிலத்தின் வழியாக 2 மின்கம்பங்கள் நட்டு மின் இணைப்பு கொடுத்து விட்டதாகவும் தெரிவித்தார்.

7.5 29.11.2017 அன்று குறைதீர்க்கும் மன்றத்தில் ஆஜராகி மேற்படி விவரங்களை தெரிவித்த போதும் அவர்கள் கோவில்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மின் வாரியத்தின் மீது

வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதால் மின் வாரியம் வழக்கு முடியும் வரை மின் கம்பத்தை இடம் மாற்றியமைக்க இயலாது என்று கூறியதாக தெரிவித்தார்.

7.6 குருவம்மாள் அவர்களின் நீதிமன்ற வழக்கானது அவருக்கு வழங்கப்பட்ட மின் இணைப்பை மின் வாரியம் துண்டிக்கக் கூடாது என்பதாகவும், எனது கோரிக்கையானது எனது பட்டா நிலத்தில் உள்ள 2 மின் கம்பங்களை அகற்ற வேண்டும் என்பதால் எனது கோரிக்கைக்கும் நீதிமன்றத்தில் உள்ள வழக்கு சம்மந்தமான கோரிக்கைக்கும் எவ்வித தொடர்புமில்லையாதலால் தமது கோரிக்கையை ஏற்று தீர்வு வழங்கும்படி கேட்டுக்கொண்டார்.

8. <u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 எதிர்மனுதாரர்கள் சார்பில் திரு. S. ஜெயசீலன், உதவி செயற்பொறியாளர்/தாழையூத்து & திரு. A. கிருஷ்ணன், உதவி பொறியாளர்/கங்கைகொண்டான் ஆகியோர் கலந்து கொண்டு தங்களது பதிலுரையிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்கள்.

8.2 திருமதி. குருவம்மாள் அவர்களுக்கு மின் இணைப்பு வழங்க மின் வாரியத்தால் நிறுவப்பட்டிருக்கும் மின்கம்பங்களை இடமாற்றம் செய்வது சம்மந்தமாக திருமதி. சிவகாமி அவர்கள் அளித்த புகார் மனுவிற்கு தகுந்த விளக்கம் கடந்த 06.09.2016 அன்றே திருமதி. சிவகாமி அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், மேலும் கடந்த 10.08.2017 நாளிட்ட கடிதத்திலும் திருமதி. குருவம்மாள் அவர்கள் மின் இணைப்பு பெற மின்வாரியத்திற்கு வழங்கிய ஆவணங்கள் போலியானது என உறுதிசெய்யப்பட்டால் அவருக்கு வழங்கிய மின் இணைப்பை மின் துண்டிப்பு செய்ய மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவித்தனர்.

8.3 திருமதி. சிவகாமி அவர்கள் கூறுவது போல் திருமதி.குருவம்மாள் மற்றும் திரு.முப்பிடாதி ஆகியோர்கள் திருமதி. சிவகாமி அவர்களுக்கு சர்வே எண்.42/1 மற்றும் 42/2A ஆகியவற்றிலுள்ள நிலத்தை கிரயம் செய்து கொடுத்தது, திருமதி.குருவம்மாள் அவர்களுக்கு மின்இணைப்பு வழங்கிய 23.08.2016 வரை மின்வாரியத்திற்கு தெரியாது எனவும் தெரிவித்தனர்.

8.4 திருமதி.குருவம்மாள் அவர்களுக்கு புதிய மின்இணைப்பு வழங்க புதிய மின்கம்பங்கள் நிறுவ களஆய்வுக்கு சென்றபோது அங்கு எந்தவிதமான பாகபிரிவினையோ, எல்லைக்கற்களோ இல்லாத நிலையில் இருந்ததாகவும், மேல்முறையீட்டாளர் கூறுவது போல் பட்டா எண்.1122 ஆனது

திருமதி. சிவகாமி அவர்களின் தனிப்பட்ட பெயரில் இல்லை எனவும், கூட்டுப்பட்டாவாகத்தான் இருக்கிறது எனவும் தெரிவித்தனர்.

8.5 திருமதி.குருவம்மாள் அவர்கள் தனது வீட்டிற்கு புதிய மின் இணைப்பு வேண்டி கங்கை கொண்டான் பிரிவு அலுவலகத்தில் சமர்ப்பித்த விண்ணப்பத்தில், தனது வீட்டிற்கும் வரும் பாதை தனக்கும் தனது சகோதரர் திரு.முப்பிடாதி ஆகியோர்களுக்கு இடையே 1992ம் ஆண்டு நடைபெற்ற பாகபிரிவினை பத்திரத்தின் சான்றொப்பமிட்ட நகலையும், தனது வீட்டிற்கு செல்லும் பாதைக்குரிய வரைபடத்தை சன்னது புதுக்குடி ஊராட்சி மன்ற தலைவரிடமிருந்து பெற்றுத் தந்ததின் அடிப்படையிலும், புதிய மின்பாதை அமைக்க செலவாகும் தொகையையும் மின்வாரியத்திற்கு செலுத்தியதின் அடிப்படையிலும், கடந்த 18.06.2016 அன்று திருமதி.குருவம்மாள் அவர்களின் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டதாகவும், பின்னர் கடந்த 23.08.2016 அன்று புதிய மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும், மேல்முறையீட்டாளர் கூறுவது போல் ஒரே நாள் இரவில் திருமதி.குருவம்மாள் அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்தனர்.

8.6 மேலும் திருமதி.குருவம்மாள் அவர்கள் திருமதி. சிவகாமி அவர்களுக்கு கிரயப்பத்திரம் மூலம் நிலம் எதுவும் விற்பனை செய்யவில்லை என்றும் மேற்படி மின்வழித்தடம் அமைந்துள்ள சர்வே எண்.40, 42/1, 42/2A ஆகியவை தனக்கும், தனது சகோதரர் திரு. முப்பிடாதி மற்றும் தனது தந்தை திரு.சுடலைமுத்து கோனார் ஆகியோருக்கு சொந்தம் என்றும் ஆகவே அந்த நிலத்தின் வழியாக மின்கம்பம் நிறுவி தனது வீட்டிற்கு வழங்கப்பட்ட மின் இணைப்பு எண்.023–006–555ஐ மின் துண்டிப்பு செய்யக்கூடாது என்றும் கோவில்பட்டி நீதிமன்றத்தில் வழக்கு எண்.OS 216/2017 தொடர்ந்து அந்த வழக்கு இன்று வரையிலும் நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்தனர்.

8.7 ஆகவே மேற்கண்ட வழக்கில், சர்வே எண்.40, 42/1, 42/2A லுள்ள நிலம் கிரயம் செய்தது தொடர்பாகவும் மேலும் அந்த சர்வே எண்களின் வழியே மின் வழித்தடம் அமைத்து திருமதி.குருவம்மார் அவர்களுக்கு வழங்கிய மின்இணைப்பை மின் துண்டிப்பு செய்யக்கூடாது என கோரியுள்ளதால், நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலேயே, திருமதி. சிவகாமி அவர்கள் அளித்த மனு மீது நடவடிக்கை எடுக்க இயலும் என திருநெல்வேலி நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற கூட்டத்தில் திருமதி. சிவகாமி அவர்களிடம் தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

**8.8** ஆகவே மின் வழித்தடம் அமைத்த இடம் சம்பந்தமான வழக்கு நிலுவையில் இருப்பதால் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலும், மேலும் தமிழ்நாடு மின் வழங்கல் விதி TNERC/SC/7/24, dt. 18.03.2011 ல் அத்தியாயம் **2(5)(6)**ல் குறித்துரைக்கப்பட்டவாறு மின்கம்பத்தை இடமாற்றி வைக்க புதிய இடம் அடையாளம் காண்பித்து மின்கம்பத்தை இடமாற்றியமைக்க ஆகும் தொகையையும் வாரியத்திற்கு செலுத்தும் பட்சத்திலும் தான், திருமதி. சிவகாமி அவர்கள் வேண்டுவது போல மின்கம்பத்தை இடம்மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்க இயலும் என தெரிவித்தனர்.

**9.** <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

**9.1** இருதரப்பு வாதங்களையும் மற்றும் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது திருமதி.குருவம்மாள் அவர்களுக்கு சர்வே எண். எண்.**40, 42/1, 42/2**A ல் மின்கம்பங்கள் நடப்பட்டு மின்பாதை அமைக்கப்பட்டு மின்இணைப்பு எண்.**023–006–555** வழங்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளரோ தனது பட்டா (சர்வே எண்.**42/1, 42/2**A) நிலத்தில் திருமதி. குருவம்மாள் என்பவர் தனது நிலம் என்று மின் வாரியத்திடம் போலி ஆவணங்கள் கொடுத்து மின் கம்பங்கள் நட்டு மின்இணைப்பு பெற்று உள்ளதாகவும் மின் கம்பங்களை உடனடியாக அகற்றக் கோரியும் முறையீடு செய்துள்ளார்.

**9.2** இதுசம்மந்தமாக எதிர்மனுதாரர்கள் திருமதி.குருவம்மாளிடம் மின்கம்பம் மற்றும் மின்கம்பிகளை மாற்று இடம் வழியாக கொண்ட செல்ல வேண்டும் என்றும் தவறினால் மின் இணைப்பு நிரந்தரமாக துண்டிப்பு செய்யப்படும் என்று **10.08.2017** நாளன்று அறிவிப்பு செய்துள்ளனர். ஆனால் திருமதி குருவம்மாள் அவர்கள் மின்வழித்தடம் அமைந்த சொத்துக்களில் மேல்முறையீட்டாளருக்கு எவ்வித பாத்தியமும், உரிமையும் கிடையாது என்றும் எனவே எதிர்மனுதாரரான உதவி மின் பொறியாளர் / விநியோகம் அவர்களோ அல்லது அவரது வகையாட்களோ தனது மின் இணைப்பு எண்.**023–006–555**–ஐ மின்துண்டிப்பு செய்யக்கூடாது என்று கோவில்பட்டி நீதிமன்றத்தில் வழக்கு எண்.OS **216/2017** தொடர்ந்துள்ளதாகவும், அந்த வழக்கு தற்பொழுதுவரை நிலுவையில் உள்ளதாகவும் அறியமுடிகிறது.

**9.3** மேல்முறையீட்டாளரோ குருவம்மாள் அவர்களின் நீதிமன்ற வழக்கானது அவருக்கு வழங்கப்பட்ட மின் இணைப்பை மின் வாரியம் துண்டிக்கக் கூடாது என்பதாகவும், தன்னுடைய கோரிக்கையானது தனது பட்டா நிலத்தில் உள்ள **2** மின் கம்பங்களை அகற்ற வேண்டும் என்பதாகவும் ஆதலால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கைக்கும் நீதிமன்றத்தில் உள்ள வழக்கு

சம்மந்தமான கோரிக்கைக்கும் எவ்வித தொடர்புமில்லையாதலால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை ஏற்று தீர்வு வழங்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

9.4 எதிர்மனுதாரர்களோ மேற்கண்ட வழக்கில், சர்வே எண்.40, 42/1, 42/2A லுள்ள நிலம் கிரயம் செய்தது தொடர்பாகவும் மேலும் அந்த சர்வே எண்களின் வழியே மின் வழித்தடம் அமைத்து திருமதி.குருவம்மாள் அவர்களுக்கு வழங்கிய மின்இணைப்பை மின் துண்டிப்பு செய்யக்கூடாது எனவும் கோரியுள்ளதால், நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலேயே, திருமதி. சிவகாமி அவர்கள் அளித்த மனு மீது நடவடிக்கை எடுக்க இயலும் என தெரிவித்து 09.02.2018 அன்று அரசு வழக்கறிஞர் அளித்த சட்டக்கருத்துரையையும் அளித்தனர்.

9.5 மின் இணைப்பு எண்.023–006–555 மற்றும் அது சம்மந்தமாக அமைக்கப்பட்ட மின் வழித்தடம் ஆகியவற்றின் அனுபவம் சம்மந்தமான வழக்கு எண்.OS 216/2017 கோவில்பட்டி நீதிமன்றத்தில் நிலுவையில் நிலுவையில் உள்ளது என்று தெரிகிறது. எனவே, நான் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறைவிதிகளின் விதி 17(4)(d) ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*" 17 (4) No Complaint to the Electricity Ombudsman shall lie unless :*

*xxx xxx xxx*

*(d) The complaint does not pertain to the same subject matter for which any proceedings before any court is pending or a decree or award or a final order has already been passed by any competent court; and*

*xxx xxx xxx "*

9.6 மேற்கண்ட விதி 17(4)(d) கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது முறையீட்டாளரின் புகாரில் உள்ள நுதல்பொருள் (subject matter) சம்மந்தமாக வழக்கு ஏதாவது நீதிமன்ற நடவடிக்கையில் நிலுவையில் இருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதிமன்றம் ஏற்கனவே கட்டளையோ தீர்ப்போ இறுதி ஆணையோ வழங்கியிருந்தாலோ அத்தகை முறையீட்டினை மின்குறைதீர்ப்பாளரால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிகிறது.

**9.7** கோவில்பட்டி நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கு எண்.OS **216/2017**ல் உள்ள கோரிக்கை என்ன வென்று தெரிந்து கொள்ள அந்த வழக்கின் மனுதாரரின் கோரிக்கையை ஆராய வேண்டும். வழக்கில் கோரப்பட்டுள்ள பத்தி **4** முதல் பத்தி **8** வரையிலுள்ள தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*" 4) பிராது நபசில் கண்ட சொத்தும் வேறும், வாதிக்கு **3.6.1996**ம் தேதிய பதிவு பாகப்பிரிவினை ஆவணம் மூலம் பாத்தியப்பட்டு வாதியால் அனுபவம் செய்யப்பட்டு வந்து பிராது தபசில் கண்ட சொத்தில் **2015**ம் வருடத்தில் வீடு கட்டி அதற்கு பிரதிவாதி அலுவலகத்திலிருந்து **07-023-006-555** என்ற எண் கொண்ட மின் இணைப்பும் கடந்த **12.7.2016**ம் தேதியில் பெற்று மேற்படி மின் இணைப்பிற்கு தவறாது மின் கட்டணமும் செலுத்தி வருகிறார். மேற்படி பிராது தபசில் கண்ட வீட்டிற்கு புன்செய் சர்வே எண்கள் **42, 42/2**A மற்றும் நத்தம் சர்வே எண்.**40**ன் வழியாக **4** மின்கம்பங்கள் ஊன்றி, மின் வழித்தடம் கொண்டு செல்லப்பட்டு அனுபவம் செய்யப்பட்டு வருகிறது.*

*5) மேற்படி வீட்டிற்கு மின் இணைப்பு பெறுவதற்கும், மின் கம்பங்கள் நடுவதற்கும் வாதி, பிரதிவாதி அலுவலகத்தில் ரூ.40,000/- வரை கட்டணமாக செலுத்தி ரசீதும் பெற்றுள்ளார். மேற்படி மின் வழித்தடம் வரக்கூடிய சர்வே எண்42/2A என்பது வாதிக்கும், சர்வே எண்.42 என்பது வாதியின் தம்பியாகிய முப்பிடாதிக்கும், நத்தம் சர்வே எண்.40 என்பது வாதியின் தந்தையாகிய சுடலைமுத்துக் கோனாருக்கும் பாத்தியப்பட்டது ஆகும்.*

*6) இந்நிலையில் பிரதிவாதி பாளையம்கோட்டையை சேர்ந்த சிவகாமி என்பவர் புகார் கொடுத்திருப்பதாகவும் அதனால் வாதியின் வீட்டிற்கு செல்கின்ற மின்கம்பம் மற்றும் மின் கம்பிகளை மாற்று இடம் வழியாகக் கொண்டு செல்ல வேண்டும், தவறினால் மின் இணைப்பு நிரந்தரமாக துண்டிக்கப்படும் எனக்கூறி பிரதிவாதி கடந்த 10.8.2017ம் தேதியிட்டு அறிவிப்பு அனுப்பி உள்ளார். மேற்படி அறிவிப்பில் கண்டவாறு சிவகாமி என்பவருக்கு மேற்படி மின் வழித்தடம் வரக்கூடிய சொத்துக்களில் எவ்வித பாத்தியமும் உரிமையும் கிடையாது. ஷை நபர் பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பொய்யான புகாரை கொடுத்து அதனடிப்படையில் எவ்வித முகாந்திரமும் இன்றி பிரதிவாதி வாதிக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளார்.*

*7) மின் இணைப்பு என்பது மனித வாழ்க்கைக்கு மிக அத்தியாவசியமானது. மேற்படி மின் இணைப்பானது சட்ட விரோதமாகத் துண்டிக்கப்பட்டால் அது வாதியின் RIGHT TO LIVE என்பதை பாதிக்கப்படக்கூடியதாகும். மேற்படி பிரதிவாதியின் செய்கையானது அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிரானது ஆகும்.*

*8) மேற்படி பிரதிவாதியின் சட்டத்திற்கு புறம்பான செயலை சமூகம் நீதிமன்றத்தின் தகுந்த உத்தரவின் மூலம் மட்டுமே தடுத்து நிறுத்த முடியும். எனவே, பிராது தபசில் வீட்டிற்கு வழங்கப்பட்ட மின் இணைப்பு எண்.07–023–006–555ஐ பிரதிவாதியோ, அவரது வகையாட்களோ மின் துண்டிப்பு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் இந்த வழக்கு சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகிறது."*

**9.8** மேற்கண்ட தகவல்களின்படி சர்வே எண்.40, 42/1, 42/2A ஆகியவற்றின் வழியே மின் வழித்தடம் அமைத்து திருமதி.குருவம்மாள் அவர்களுக்கு வழங்கிய மின்இணைப்பை பிரதிவாதியாகிய உதவி மின் பொறியாளரோ அல்லது அவரது வகையாட்களோ மின் துண்டிப்பு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

**9.9** இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையானது அவருக்கு சொந்தமான பட்டா இடத்தில் நடப்பட்ட இரண்டு மின் கம்பங்களையும் அகற்றுவதாகும். ஆனால் திருமதி.குருவம்மாளின் மின் இணைப்பை மின் துண்டிப்பு செய்யாமல் மின்பாதையிலுள்ள மின்கம்பங்களை அகற்றுவது இயலாத ஒன்றாகும். எனவே எதிர்மனுதாரர்களின் வாதமான நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலேயே, திருமதி. சிவகாமி அவர்கள் அளித்த மனு மீது நடவடிக்கை எடுக்க இயலும் என்பது எனக்கு ஏற்புடையதாக உள்ளது.

**9.10** மேற்கண்ட மின் இணைப்பை கொடுக்க அமைக்கப்பட்ட மின்வழித்தடத்திலுள்ள கம்பங்களைத்தான் அகற்ற வேண்டும் என்று என் முன்னால் உள்ள மேல்முறையீட்டு மனு எண்.77/2017ல் உள்ள வழக்கில் மேல்முறையீட்டாளர் கோரிக்கை வைத்துள்ளார்.

**9.11** மேற்கண்ட மின்இணைப்பு மற்றும் அது சம்மந்தமாக அமைக்கப்பட்ட மின் வழித்தடம் ஆகியவற்றின் அனுபவம் சம்மந்தமாக வழக்கு எண்.OS 216/2017 கோவில்பட்டி நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் மன்ற விதி 17(4)(d) ன் படி மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவை ஏற்றுக்கொண்டு மின்குறைதீர்ப்பாளர் தீர்வு எதுவும் வழங்க முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**10.** **முடிவுரை**

**10.1** மின் இணைப்பு எண்.023–006–555 மற்றும் அது சம்மந்தமாக அமைக்கப்பட்ட மின் வழித்தடம் ஆகியவற்றின் அனுபவம் சம்மந்தமான வழக்கு எண்.OS 216/2017 கோவில்பட்டி நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் மன்ற விதி 17(4)(d) ன் படி மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவை ஏற்றுக்கொண்டு மின்குறைதீர்ப்பாளர் தீர்வு எதுவும் வழங்க முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**10.2** மேற்கண்ட தீர்வுடன் மேல் முறையீட்டு மனு எண்.72/2017 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன் )**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. J. சிவகாமி,
க/பெ D.V. ஜெயபாலன்,
51/9, பேரடைஸ் பிளாட்,
6வது பிளாக், வளையாபதி ரோடு,
முகப்பேர் கிழக்கு, சென்னை–37.

2) செயற் பொறியாளர்/திருநெல்வேலி/விநியோகம்/கிராமப்புறம்,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சிவந்திப்பட்டி ரோடு, தியாகராய நகர்,
திருநெல்வேலி–627 811.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மகாராஜா நகர், திருநெல்வேலி 627 011.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.